

வேலூர் அண்ணா கலையரங்கம் அருகில் தெற்கு வடக்கு மாவட்டம் சார்பில் ஒன்றிய அரசின் கைப்பாவையாக மாறிய தேர்தல் ஆணையத்தின் எஸ்.ஐ.ஆர்.ரைக் கண்டித்து நடந்த ஆர்ப்பாட்டத்தில் மார்க்சிஸ்ட் கட்சி முன்னாள் செயலாளர் கே.பாலகிருஷ்ணன், ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ., டி.எம்.கதிர் ஆனந்த் எம்.பி. கலந்துகொண்டு பேசினார்கள். உடன் மாவட்ட அவைத்தலைவர்தி.அ.முகமதுசகி மாநகரச் செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ., குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர் அமலுவிஜயன் மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், துணை மேயர் எம்.சுனில்குமார் மற்றும் கூட்டணி கட்சியினர், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் 2025 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்திற்கான அனைத்து துணை பதிவுத்துறை தலைவர்கள், மாவட்ட பதிவாளர்கள் பணித்திறன் ஆய்வு மற்றும் கடலூர் மண்டல பதிவுத்துறை அலுவலர்கள் பணி சீராய்வு கூட்டம் நடைபெற்றது. உடன் துறை சார்ந்த அதிகாரிகள் உள்ளனர்.

### வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர சீராய்வை (S.I.R) எதிர்த்து கண்டன ஆர்ப்பாட்டம்!

# செங்கல்பட்டில் 12 ஆயிரம் பேர் பங்கேற்று கண்டன முழக்கம்!

## மனித நேய மக்கள் கட்சி தலைவர் எம்.எச்.ஜவாஹிருல்லா கண்டன உரை!

**செங்கல்பட்டு, நவ. 13- செங்கல்பட்டில் ஒன்றிய பா.ஜ.க அரசின் கைப்பாவையாக செயல்படும் இந்திய தேர்தல் ஆணையத்தைக் கண்டித்து, வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர சீராய்வை (S.I.R) எதிர்த்து காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக் கட்சிகளின் சார்பில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் 12 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மதசார்பற்ற முற்போக்கு கூட்டணிக் கட்சியினர் அணிதிரண்டு பங்கேற்று கண்டன முழக்கமிட்டனர்.**



தமிழ்நாட்டில் சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் (S.I.R) சீராய்வை தேர்தல் ஆணையம் கைவிடக்கோரியும், ஒன்றிய பா.ஜ.க அரசின் கைப்பாவையாக மாறி எதேச்சாதிகாரப் போக்குடன் தேர்தல் ஆணையம் தமிழ்நாட்டில் (S.I.R) செயல்படுத்துவதைக் கண்டித்தும்,

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக் கட்சிகளின் சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் செங்கல்பட்டு பழைய பேருந்து நிலையம் அருகில் தி.மு.க தீர்மானக் குழுச் செயலாளர் மீ.அ.வைதியலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

செங்கல்பட்டு தெற்கு மாவட்ட காங்கிரஸ் தலைவர் ஆர்.சுந்தரமூர்த்தி தொடக்கத்தில் அனைவரையும் வரவேற்றார்.

மாவட்ட காங்கிரஸ் கட்சித் தலைவர்கள் ஆர்.எஸ். செந்தில்குமார், கே.வி. திலகர், எஸ்.ஜெ.நிக்கோலஸ், மாவட்ட ம.தி.மு.க செயலாளர்கள் மா.வை மகேந்திரன், பூ.லோகநாதன், பரத்ராஜேந்திரன், மாவட்ட மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி செயலாளர், ப.சு.பாரதி, மாவட்ட இந்திய கம்யூனிஸ்ட் கட்சி செயலாளர்கள் ஏ. ராஜ்குமார், பா.கார்த்திக்,

மவாட்ட முஸ்லீம் வீக் தலைவர்கள், முகம்மது பேக். ஷேக்தாவூத், சைதை ம.ஜேக்கப், ப.சாமுவேல் எபினேசர், திருநீர்மலை தமிழரசன், கு. தென்னவன், மேனகாதேவி கோமகன், எஸ்.கே.ஜாகிர் உசேன், ஏ.எஸ்.முகம்மது ரவி, செங்கல்பட்டு மாவட்ட திராவிடர் கழகத் தலைவர் செம்பியன், ஆம் ஆத்மி மாவட்டச் செயலாளர், ராஜ்குமார், மாவட்ட திராவிடர் இயக்க தமிழ்ப் பேரவை செயலாளர் ஏ.அன்பு உள்ளிட்ட கூட்டணித் தலைவர்கள் முன்னிலை வகித்தனர்.

இம்மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தை முடித்து வைத்து மனித நேய மக்கள் கட்சி மாநிலத் தலைவர் எம்.எச்.ஜவாஹிருல்லா, இந்திய கம்யூனிஸ்ட் மாநில செயற்குழு உறுப்பினர் ஜி.ஆர்.ரவிந்திரநாத் ஆகியோர் கண்டன உரையாற்றினார்கள்.

சட்டமன்ற உறுப்பினர்கள் இ.கருணாநிதி, எஸ்.ஆர். ராஜா, வரலட்சுமி மதுசூதன், எஸ்.பாலாஜி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் க.பீம் ராவ், மனித நேய மக்கள் கட்சி மாநில துணைச் செயலாளர் எம். யாக்கூப், மனித நேய மக்கள் கட்சி மாநில பிரதிநிதி எஸ்.எம்.ஷாஜகான், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாநில கட்டுப்பாட்டுக் குழு உறுப்பினர் இ. சங்கர், திராவிட இயக்க தமிழர் பேரவை துணைச் செயலாளர் இ. இளமாறன்,

மாவட்ட தி.மு.க துணைச் செயலாளர் து.மூர்த்தி, மாவட்ட பொருளாளர் வெ. விசுவநாதன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் க.அன்புச்செல்வன், ஜி.சி. அன்புச் செழியன், ஆதிமாறன்,

காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் படப்பை ஆ. மனோகரன், தாம்பரம் மாநகராட்சி மேயர் வசந்தகுமார், துணை மேயர் கோ.காமராஜ், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், வீ.தமிழ்மணி, எல். இதயவர்மன், கழக தொழில்நுட்ப மாநில துணைச் செயலாளர் அ.தமிழ்மாறன்,

ஒன்றிய தி.மு.க செயலாளர்கள் எஸ்.டி.கருணாநிதி, ந.கோபால், பையனூர் சேகர், ஏ.வந்தேமாதரம், பி. சந்தானம், ஜி.கே.ரவி, எம்.டி. லோகநாதன், ஏ.மணி, கே.பி.ராஜன், நகரச் செயலாளர்கள் ஜெ.சண்முகம், டி.பாபு, எஸ். ஜபருல்லா, கே.சத்தியமூர்த்தி, எம்.கே.டி. கார்த்திக், ஆர்.சதீஷ்குமார், த.வினோத்குமார்,

பகுதி செயலாளர்கள் என்.சந்திரன், ப.குணாளன், வே.கருணாநிதி, இ.ஜோசப் அண்ணாதுரை, த. ஜெயக்குமார், எஸ். சேகர், எஸ்.இந்திரன், டி. காமாராஜ், ஆ.நடராஜன், ஏ.கே.கருணாகரன், இ.எஸ். பெர்னாட், ஆர். சுரேஷ், கழக அணிகளின் மாநில நிர்வாகிகள் சாய் ஜெயகாந்த் பாரதி, பிரதிப்,

பொதுக்குழு உறுப்பினர்கள், எம்.எஸ்.கே.இப்ராகிம், ஆர்.டி.பூபாலன், கீதா ஆனந்தன் எம்.ஆர். சீனிவாசன், ஆர்.எஸ்.சங்கர், எஸ். சதீஷ், க. தேவேந்திரன், கே.எத்திராஜ், எம்.செல்வகுமார், மா.கணேஷ்பாபு, செ.அருள்தேவி, இரா.பாஸ்கரன், மு.ரஞ்சன், ஜிஜேந்திரன் ராமு, பேரூர் செயலாளர்கள், மு.தேவராஜ், ஜி.டி யுவராஜ், மாநகர நிர்வாகிகள் இரா. நரேஷ்கண்ணா, பொன். சதாசிவம், வ. விஜயரங்கன்,

மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ், துணை அமைப்பாளர்கள் வீ.ஜெயகுமார், ப.இராமமூர்த்தி, டி.கே.கமலக்கண்ணன், கே.மணி கண்டன், கே.ஜானகிராமன், கழக அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், எல்.பிரபு, ச.சிசிகலா, பா.ஞானப்பி ரகாசம், தி.க. பாஸ்கரன், வி. ரவிச்சந்திரன், ஜா. செந்தில் தேவராஜ், டி.பி. செந்தில்குமார்,

கே.ஆர்.ஆனந்தன், எஸ். ஆல்பர்ட், ஜான்தினகரன், பொன்.ரமேஷ்ரவி, தங்கம் வாட்ஸ், டி.எஸ் எம்.ஜெயகரன், எஸ்.கர்ணன், டி.ஆர். சாரதி பெரியநாயகம், பெப்சி கண்ணன், ஆர்.கோவிந்தன், மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் எஸ்.சத்தியப் பிரபு ஆகியோர் உட்பட 12,000க்கும் மேற்பட்ட மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக் கட்சியினர் கடும் வெய்யிலையும் பொருட்படுத்தாமல் அணி திரண்டு வந்து கலந்து கொண்டு கண்டன முழக்கங்களை எழுப்பினார்கள்.

இக்கண்டன ஆர்ப்பாட்டத்தின் காரணமாக செங்கல்பட்டு நகரமே ஸ்தம்பித்தது. செங்கல்பட்டு பழைய பேருந்து நிலையம் முழுவதும் கூட்டணிக் கட்சியினர் திரண்டு வந்ததால் கூட்டம் பார்க்கக் கண்கொள்ளா காட்சியாக இருந்தது.

---

**சென்னை வடக்கு, வடகிழக்கு, கிழக்கு, மேற்கு, தென்மேற்கு, தெற்கு – காஞ்சிபுரம், வடக்கு – திருவள்ளூர் கிழக்கு, மேற்கு, மத்திய மாவட்டங்களுக்குட்பட்ட**

# மாவட்டச் செயலாளர்கள் - சட்டமன்றத் தொகுதி பார்வையாளர்கள் - தொகுதி தகவல் தொழில்நுட்ப ஒருங்கிணைப்பாளர்கள்- மாவட்ட சட்டத்துறை ஒருங்கிணைப்பாளர்கள் (DLC) கூட்டம்!

## துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா எம்.பி. அறிவிப்பு!



சென்னை வடக்கு, வடகிழக்கு, கிழக்கு, மேற்கு, தென்மேற்கு, தெற்கு - காஞ்சிபுரம் வடக்கு - திருவள்ளூர் கிழக்கு, மேற்கு, மத்திய மாவட்டங்களுக்குட்பட்ட மாவட்ட கழகச் செயலாளர்கள் - சட்டமன்றத் தொகுதி பார்வையாளர்கள் - தொகுதி தகவல் தொழில்நுட்ப ஒருங்கிணைப்பாளர்கள் (OTN) - மாவட்ட சட்டத்துறை ஒருங்கிணைப்பாளர்கள் (DLC) கலந்துரையாடல் கூட்டம் இன்று ( 13.11.2025- வியாழக்கிழமை) காலை 11.30 மணியளவில் சென்னை, தியாகராயர் நகர், ஓட்டல் அகார்டில் நடைபெறும். இக்கூட்டத்தில் சட்டத்துறை செயலாளர் என்.ஆர். இளங்கோ எம்.பி. கலந்து கொள்ள உள்ளார்.

அதுபோது மேற்குறிப்பிட்ட அனைவரும் தவறாது கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்ளப்படுகிறது.

பொருள் : கழகத்தலைவர் அவர்கள் தலைமையில் 09.11.2025 அன்று நடைபெற்ற காணொலிக் காட்சி கூட்டத்தில் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின்படி கணக்கீட்டு படிவம் (Enumeration Form) மீதான பணிகளை முழுமையாக முடிப்பது குறித்து!

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை - 18
09.11.2025

**ஆ.இராசா எம்.பி.**
துணைப் பொதுச் செயலாளர்
தி.மு.க.

---



திருப்பத்தூர் மாவட்டம் கந்திலி ஒன்றியத்தில் ரூ.50 லட்சம் மதிப்பிலான பணிகளை அ.நல்லதம்பி எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் ஒன்றியச் செயலாளர்கள் கே.ஏ.குணசேகரன், கே.எஸ்.ஏ.மோகன்ராஜ், தொகுதி பார்வையாளர் வேலூர் ஜி.ரமேஷ், திருமதி.திருமுருகன், தசரதன், சீனிவாசன், மஞ்சுளா பூபதி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.


---

### மண்டலப் பொறுப்பாளர் - அமைச்சர் எம்.ஆர்.கே பன்னீர்செல்வம் பங்கேற்பு!

# விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. அவசரச் செயற்குழு ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. அறிக்கை!

*செஞ்சி, நவ 13 -* விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழு ஆலோசனைக் கூட்டம் விழுப்புரம் வடக்கு மாவட்ட அவைத் தலைவர் டாக்டர் ப.சேகர் தலைமையில் சட்டமன்றத் தொகுதி மேற்பார்வையாளர்கள் செஞ்சி கார்த்திகேயன், மயிலம் இள.புகழேந்தி, திண்டிவனம் ஜாஃபர் அலி ஆகியோர் முன்னிலையில் இன்று (13.11..2025 - வியாழக்கிழமை) மாலை 4.00 மணி அளவில் செஞ்சி சேத்பட் சாலையில் உள்ள மேல்களவாய் ஜி.கே.திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.



கூட்டத்தில் மண்டல பொறுப்பாளர் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகிறார்.

கூட்டத்திற்கு மாநில, மாவட்ட, நிர்வாகிகள், பொதுக்குழு, செயற்குழு , உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கழக செயலாளர்கள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதி, நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:

1. SIR (சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தம் சீராய்வு) சம்பந்தமாக.

2. துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழாவை சிறப்பாக கொண்டாடுவது சம்பந்தமாக.

3.கழக ஆக்கப்பணிகள் சம்மந்தமாக ஆலோசிக்கப் படுகிறது என்று மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



வேலூர் மாநகர தி.மு.க. அலுவலகத்தில் முன்னாள் நகர மன்றத் தலைவர் வி.எம்.தேவராஜ் அவர்களின் 27 வது நினைவு தினத்தை முன்னிட்டு அவரது படத்திற்கு தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ., வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் டி.எம்.கதிர்ஆனந்த் எம்.பி. ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். உடன் மாவட்ட அவைத்தலைவர் தி.அ.முகமதுசகி, மாநகர செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ., மு.பாபு, மேயர் சுஜாதா ஆனந்தகுமார், வீனஸ் நரேந்திரன், யூசுப் கான், தி.அ.முனவர் பாஷா, வி.ஜி.கே. சுந்தரவிஜி, பாலமுரளி கிருஷ்ணா, வி.டி.எம்.பாலாஜி, கோ.முரளி பாஸ்கர் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

---

### சென்னை தென்மேற்கு மாவட்ட

# கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவைக் கூட்டம்!

சென்னை, நவ.13– சென்னை தென்மேற்கு மாவட்ட, கலை, இலக்கிய பகுத்தறிவுப் பேரவை மாவட்ட அமைப்பாளர் ச. சண்முகநாதன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:–

சென்னை தென்மேற்கு மாவட்ட தி.மு.க. கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவையின் கலந்துரையாடல் கூட்டம் இன்று (13.11.2025 வியாழக்கிழமை) மாலை 7.00 மணியளவில், தியாகராய நகர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் அவைத்தலைவர் இரா.கா.இளங்கோவன் தலைமையில் மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ., ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ., பகுதிச் செயலாளர்கள் கே.ஏழுமலை எம்.சி., நந்தனம் கி.மதி எம்.சி., மயிலை எஸ்.முரளி ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ளது.

அதுபோது மாவட்ட, பகுதி நிர்வாகிகள் அனைவரும் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:

துணை முதலமைச்சர் தி.மு.க. இளைஞர் அணிச் செயலாளர் அவர்களின் பிறந்த நாள் விழா 27.11.2025 மற்றும் கழக ஆக்கப் பணிகள் குறித்தும்.


இவ்வாறு ச.சண்முக நாதன் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

---

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## கே.கே. கோட்டையப்பன்

**நவம்பர் 13 (1996)**



**தனது இளமைப் பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.**

**ஒன்றுபட்ட திருநெல்வேலி மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளராக பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.**

**சிவந்திப்பட்டி பஞ்சாயத்து தலைவராகவும் – மாவட்ட நிலவள வங்கி தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் “இளைஞர் அணியின் செயல்திறன் மிக்க சிங்கக் குட்டியாகவும், அனைவரையும் அரவணைத்து கழகத்தின் ஆக்கப்பணிகளை அயர்வின்றி நிறைவேற்றுகிற அமைதியின் உறைவிடமாகவும் திகழ்ந்தவர்” என தனது இரங்கல் உரையில் குறிப்பிட்டுள்ளார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**